1987 ஏப்ரல் 6]

அமைப்பின்கீழ் இயங்குகின்ற ஓர் அமைப்பு என்கிற உணர்வோடு அதிலே பணியாற்றுகின்றவர்களும் நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்ககிரி தாலுக்காவை இரண்டாகப் பிரித்தல்.

305—(*வினா எண் 10198) திரு. ச. கோவிந்தசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு நகர வங்கிகள்.

306—(*வினா எண் 10395) திரு. சே. உச்சி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில், கூட்டுறவு நகர வங்கிகள் எதையாவது நலிந்த வங்கிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வங்கிகள்?

(இ) இவைகளை சீரமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ஒன்று உதகமண்டலம் நகர கூட்டுறவு வங்கி இரண்டு கோத்தகிரி நகர கூட்டுறவு வங்கி.

(இ) உள்ளது.